462

தாரண ௵ ஐப்பசி - கார்த்திகை மீ November | ஸ்ரீ: | ஸம்புடம் - 3 ஸஞ்சிகை - 11 1944

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:





# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"[illegible]

[illegible] ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

பக்கம்

விஷய ஸூசிகை :—


1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ... ... ... 261
2. காக்கை கரைதல் ... ... ... 262
3. ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் ப்ரபாவம்... ... 265
4. செய்திகள் ... ... ... 266
5. ஸம்பாதகரின் குறிப்புக்கள் ... ... ... 267
6. பஞ்சாங்க ஸங்க்ரஹம் ... ... ... 268


ஸ்ரீ:

## ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 10, பக்கம் 255-ன் தொடர்ச்சி]

[லோபனும் த்ருஷ்ணையும் மற்றவர்களை நமஸ்கரிக்கிறார்கள்- எல்லோரும் ஒருவரை ஒருவர் தழுவுகிறார்கள்.] இதற்கு, இந்தக் குணங்கள் ஒன்றையொன்று தழுவுகின் ...த்து. 'உங்கள் மூவர்களின் பத்நிகளான ரதி ஜிகாம்ஸை த்ருஷ்ணை இம் ...தள்யக் குறைவே வராமல் இருக்கவேணும்' என்று வஸந்தன் ஆசீர் ...னுடைய பத்நிக்கு 'ஜிகாம்ஸை' என்று பெயர். 'ஜிகாம்ஸை' ...தில் ஆசை' என்பது பொருள்.] தாத்பர்ய சந்த்ரிகையில், 'காண் ...தாஷித்தபொழுது அர்ஜுநனுக்குக் கோபம் கிளம்பித் தர்மபுத்ர ...ட்டு அதைச் செய்ய யத்நப்பட்டான்' என்று கோபத்தின் வ்யா...

"... धिग्गाण्डीवं धिक्च ते बाहुवीर्यम्"

என்பது ... பர்வத்தில் தர்ம புத்ரர் வசநம். பிறரை ஹிம்ஸிக்க இச்சிப்பது கோபத்தின் கார்யம். க்ரோதன் லோபனை க்ஷேமம் விசாரிக்க, 'உன்னைத் துணையாகக் கொண்ட

SL Q22ௗ211,N41 N44 3.11. 21030

21030.

எனக்கு என்ன குறைவு?' என்கிறுன் லோபன். மஹாபாரதம் என்னும் பெரிய இதிஹாஸம் துர்யோதநனுடைய கோபத்தையும், அக்கோபத்திஞல் பாரதப் போர் நடந்து ஜநங்கள் மடிந்ததையும் சொல்லுகிறது. அர்த்த புருஷார்த்தத்தை விடமாட்டாத காரணத்தால் பாரதப் போர். மற்றெரு இதிஹாஸம் காம புருஷார்த்தத்தை விடே னென்றதால் வந்த ராமாயணத்தைச் சொல்லுகிறது. இதிஹாஸங்க ளெல்லாம் நம்முடைய ப்ரபாவத்தைத்தானே பேசுகின்றது!

"क्षुद्रक्षोणिरजःकणस्थिरतृषः क्षुभ्यन्ति पृथ्वीभृतः
तप्येत स्वपदाय कः क्वचिदिति त्रस्यन्त्यमर्त्येश्वराः ।
भिक्षाकेष्वपि केषुचित् क्वचिदुपक्षिप्तेष्वधिक्षेपतः
पक्षे दुर्मतिभृत्ययोरिह जगत्तिष्ठत्यसूयेर्ष्ययोः ॥"

'க்ஷோணீகோணஶதாம்ஶபாலநகலா' என்று தொடங்கி வைராக்யத்தை ஸ்வாமி பாடினுர்; இங்கே லோபன் முகமாக லோப த்ருஷ்ணு தம்பதி சேஷத்வத்தின் ப்ரபாவத்தைப் பாடுகிறுர். உலகத்தைத் தாங்கி ரக்ஷிக்கும் அரசர்களென்று பெயர் வைத்துக்கொண்டவர்கள், அல்ப மண்ணினிடம் ஆசையால் தாங்கள் க்ஷோபப்பட்டுத் தங்கள் ப்ரஜைகளைப் பிற ராஜ்யங்களோடு சண்டையில் இறக்கித் தம் ப்ரஜைகளும் பிற ராஜ்யக் குடிகளும் அடியோடு அழியச் செய்து உலகத்தைப் பாழாக்குகிறுர்கள். ஓர் அரசன் மனத்தில் அல்ப மண்ணுசையினுல் க்ஷோப முண்டானுல், அந்த க்ஷோபத்தால் உலகத்திலேயே யுத்த க்ஷோபம் பெருகி உலகமே நாசமடைகிறது. போலந்தில் ஒரு நீளக் கோமண (Corridor) பூமியை வ்யாஜீகரித்து ஒரு தலைவனது மனம் க்ஷோப மடைந்ததால், லோக நாசகரமான இந்த மஹாயுத்தம் ஏற்பட்டது. ஆசைப்படுவது அத்யல்பமான அஸ்திரமான மண் புழுதி; அதனுல் விளைவது உலக ப்ரஜைகளே மண்ணேடு மண்ணுதல். அல்ப மண்ணில் ஆசையே மிகவும் ஸ்திரம். ப்ருத்வீ ப்ருத்துக்கள் (உலகம் தாங்குபவர்) ப்ருத்வீ நாசகர்க ளாகிறுர்கள். உலகந் தாங்கும் மலைகள் உள் அக்நியால் க்ஷோப மடைந்து எரிமலையாய்க் கொதித்துப் பக்கத்து நாடுகளைக் கொளுத்தி யழிப்பன போல. இப்படி நாசம் செய்விப்பது பூமியரசர்; தேவர்களும் இப்படியே நடப்பவர். மர்த்யேஶ்வரரைப்போல அமர்த்யேஶ்வரரும் செய்கிறுர்க ளென்று ரஸம். எவன் தவம் புரிந்தாலும், தங்கள் தேவ பதத்திற் காசைப்பட்டுத் தவம் புரிகிறுனே என்று தேவர்களுக்குப் பயம். அந்தப் பயத்திஞல் அவர்களுக்கும் எளிதில் க்ஷோபம்; அந்த க்ஷோபத்தால் அவன் தவத்தைக் குலைப்பதற்காகப் பதினுயிரம் விக்நங்களைச் செய்கிறுர்கள். யார் எங்குத் தவம் செய்கிறு னென்று கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே யிருப்பார்கள். 'ர' என்று எழுத்துத் தொடங்கிய பெயர்களைக் கண்டு மாரீச ராக்ஷஸன் பயாவிஷ்டனுய் நடுங்கிக்கொண்டே யிருந்ததுபோல, இத்தேவத் தலைவரும் 'த' என்று தொடங்கும் பேர்களைக் கண்டு நடுங்குவார்கள். தபஸ்ஸென்றுல் அத்தனை பயம். 'ஸ்வபதாய' என்பதற்கு இரண்டு பொருள்கள். 'தேவர்கள் தங்கள் பதமாகிய தேவ பதத்திற்கு' என்பது ஒரு பொருள். 'தவம் புரிபவனுக்கு ஸ்வபதமான ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவ மென்னும் மோக்ஷ பதம்' என்பது மற்றோர் பொருள். 'கோவிந்தனிடம் மநுஷ்யர் பக்தி செய்வது பதினுயிரம் விக்நங்களால் தடைப்படும்; மோக்ஷத்திற்கு ஸம்ஸாரிகள் போய்விட்டால் ஸம்ஸார மண்டலம் குறைந்து நம்மைப் பூஜிப்பவர் குறைவர்; அதனுல் நம் விபூதி குறைந்துவிடு மென்று தேவர்களே முதல் விக்நகரராவர்' என்கிற வசநத்தை இங்கே ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்கிறுர். இதனுல், ஆஸுர குணங்களையுடைய நாம் மட்டுமல்ல பகவத்பக்தி நிஷ்டையைத் தடை செய்வது; தேவர்களும் அதில் நமக்கு முதல் துணை என்பது லோபன் கருத்து. ராஜாக்களும் தேவர்களும் இப்படிப் பிறரை ஹிம்ஸிப்பது மன்றியில், பிச்சைக்காரக் கூட்டத்திலும் ஒருவனைப்பற்றிக் குறிக்கையில் அவன் தன்னை அவமானப்படுத்தியதாக எண்ணிக் கோபாவேசத்தால் ஊரை இரண்டாக்கிவிடுகிறுன். [தொடரும்]

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீசடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

## காக்கை கரைதல்

[ஒரகடம் கோமாண்டூர் ஸ்ரீ. உப. ஸுதர்ஶநாசார்யர்,
தமிழ்ப் பண்டிதர், சைதாப்பேட்டை]

* பொற்றிகழ் சித்திரகூடப் பொருப்பினில் சிறு காக்கை சீதையின் தனத்தைத் தீண்டிய ஆஸுர ப்ரக்ருதி யாயினும், பிண்டத் திரளையும் பேய்க்கிட்ட நீச சோறும்

* பெருமாளும் பிராட்டியும் சித்திரகூட பர்வதத்தில் எழுந்தருளி யிருக்குங்கால்

உண்டற்கு வேண்டி ஓடித் திரியும் தீப்பறவை யாயினும், அதனிடம் காலையில் எழுந்திருத்தல், காணமலே புணர்தல், உற்ருரோ டுண்டல், உறவாடல் முதலிய உத்தம குணங்கள் இருப்பன காணலாம். "உற்ருரோ டுண்டல்" என்னும் அரிய குணம் காக்கைக்கிருத்தலை, "காக்கை கரவாக் கரந்துண்ணும்" [காக்கைகள் தமக்கு இரையாயினவற்றைக் கண்ட விடத்து அவற்றை ஒளிக்காமல் தம் இனமாகிய பிற காக்கைகளை அழைத்து அவற்றிேடும் உண்ணு நிற்கும்] என்று திருவள்ளுவரும், "காக முறவு கலந்துண்ணக் கண்டீர்" என்று தாயுமானரும் கூறிப் போந்தனர். மேற் கூறிய நற்குணங்கள் காக்கைகட்கு இருத்தலன்றி, அவற்றின் கரைதலும் ஒரு நற்குறியாக நிமித்த முணர்ந்த பெரியோர்களால் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வித மெனின்:

பரகால நாயகி தலைமகனைப் பிரிந்து ஆற்ருது நோவுபட்டு, அவனைத் தன்னேடு சேர்க்கவேணு மென்று, தான் கண்ணுற் கண்ட பறவைகளின் காலில் விழுந்து, அவற்றை நோக்கி மாயனை அழைக்கும் அவஸரத்தில் காக்கையைக் குறித்து,

"கரையாய் காக்கைப் பிள்ளாய்
கரு மாமுகில் போனி றத்தன்
உரையார் தொல்புகழ் உத்தமனைவரக்
கரையாய் காக்கைப் பிள்ளாய்."

என்கிருள். [பெரிய திருமொழி 10. 10. 2.]

[இதன் பொருள்:—மஹோபகாரகனை காக்காய்! காளமேகம் போன்ற திருநிறத்தை யுடையவனும், சப்த பூர்த்தியோடு கூடிய நித்யமான புகழை யுடையவனும், தீரோதாத்த நாயகனுமான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனை என்னளவும் வரும்படியாகக் கூப்பிடவேணும்.] [நீ கூப்பிட்டால் அவன் வருவன் என்றபடி]. தவிர:

ஸ்ரீ பெரியாழ்வார், பல காலமாகப் பகவானை அடையாமல் ஐம்புலன்களுக்கு வசப்பட்டு வெறுப்புக்கொண்டு பெரிய பெருமாளை ப்ரார்த்திக்க, அப்பெருமான் அருளினல் தமது த்ரிகரணங்களும் தம் வசப்பட்டு அவனிடம் மேல்விழுந்து ஈடுபடுவதை அநுஸந்திக்கும் ப்ரகரணத்தில்,

"வாக்குத் தூய்மை யிலாமையினலே மாத வாவுன்னை வாய்க்கொள்ள மாட்டேன்
நாக்கு நின்னையல் லாலறி யாது நான தஞ்சுவ னென்வச மன்று
மூர்க்குப் பேசுகின் ருனிவ னென்று முனிவா யேலுமென் னுவினுக் காற்றேன்
காக்கை வாயிலுங் கட்டுரை கொள்வர் காரணகரு ளக்கொடி யானே."

என்கிருர். [பெரியாழ்வார் திருமொழி 5. 5. 1]

[இதன் பொருள்:—திருமகள் தலைவனே! உலகத்துக் கெல்லாம் காரணனே! கருடக் கொடியை உடையவனே! என்னுடைய வாக்குக்குப் பரிசுத்தியானது இல்லாதிருத்தலினல் (பிராட்டி முதலானர் ஸ்தோத்ரம் செய்ய வேண்டிய) உன்னை அடியேன் ஸ்தோத்ரம் செய்ய வல்லே னல்லேன். (ஆயினும்) என்னுடைய நாக்கு (உன்னை

---

பிராட்டியினிடம் அபசாரப்பட்டுக் கண்ணழிவு செய்துகொண்டவன் ஆஸுர ப்ரக்ருதியான காகாஸுரன் ஒருவனே யாயினும், காக்கை ஸாமாந்யத்தையும் அவனேடு வாசியற ஒப்புமை கூறுதல் எவ்விதம் ஒக்குமெனின்:—

*"பொற்றிகழ் சித்திர கூடப் பொருப்பினில்
உற்ற வடிவி லொருகண் ணுங்கொண்டவக்
கற்றைக் குழலன் கடியன் விரைந்துன்னை
மற்றைக்கண் கொள்ளாமே கோல்கொண்டுவா
மணிவண்ண நம்பிக்கோர் கோல்கொண்டுவா."

[பெரியாழ்வார் திருமொழி 2. 6. 7.]

எனும் பாசுரத்தில், ஆகண்டலன் மகன் (காகன்) ஆவலிப் பேறி அபராதம் செய்ததற் காகக் காகுத்தன் அவன் ஒற்றைக் கண்ணை அழிவு செய்தபோது, "வாகஃ வாவாநி கூாரூதெ ஹஉ ஹூஂதெகு ஊஹாஜநஃ" என்றபடி காக்கைகள் எல்லாவற்றுக்குமே ஒற்றைக் கண்ணும்படி அவன் ஸங்கல்பித்ததனல், காகாஸுரனுக்கும் மற்றைச் சாதாரண காக்கைகட்கும் அபேதமாக ஸ்ரீ பெரியாழ்வார் (தம்மை யசோதைப் பிராட்டியாகப் பாவித்து) அருளிச்செய்ததன் நயமும்; இதனை யொட்டி,

"ஏக வாளியவ் விந்திரன் காதன்மேல்
போக வேவி யதுகண் பொடித்தநாள்
காக முற்றுமோர் கண்ணில வாக்கிய
வேக வென்றியைத் தன்றலை மேற்கொள்வாள்."

[கம். ராமா. சுந்தர காண்டம் காட்சிப் படலம் 28]

என்று கம்பநாடர் அருளியதும் ரஸிகர்களால் நோக்கத் தக்கன.

ஸ்தோத்ரம் செய்து ருசி கண்டதனால் ஸர்வ ரஸமயனான) உன்னை யல்லாமல் வேறொரு வரைச் (சொல்ல) அறியாது. அடியேன் (தூய்மையற்ற) என் நாவினைக் குறித்துப் பயப்படுவேன். (உன்னை ஸ்தோத்ரம் செய்ய வொட்டாமல் என் நாக்கை அடக்கலா மென்றால்) அது என் வசத்தில் இல்லை. (உன் வசத்தில் இருக்கிறது.) ('நாக்கு நின்னை யல்லால் அறியாது' என்றும், 'நான் அது அஞ்சுவன்' என்றும் மாறாகச் சொல்வதனால்) 'இவன் [மூர்க்கத்தன்மையாகச் சொல்லுகிறான்' என்று நினைத்து நீ கோபங் கொள்வா யென்றாலும், என் நாக்கை அடக்குவதற்கு எனக்கு வல்லமை யில்லை. (இத் தகைய என் நாவினைக் கொண்டு உன்னைத் துதிப்பதனால் உனக்கு ஒரு குறைவு வருமோ வென்று நீ நினைக்க வேண்டா. இதனால் உனக்கு ஒரு குறைவு மில்லை. எப்படி யென்றால் :—) (அற்ப ஜந்துவாகிய) காக்கையினுடைய வாயிலிருந்தும் நற்சொல்லை (உலகத்தார்) கொள்வார்கள்.] இவ்விடத்தில் :—

"காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்"—அறிவுடையார் (சகுந சாஸ்த்ரஜ்ஞர்) குற்றமாகாத வளவன்றிக்கே குணமாகவும் கொள்வார்கள். காக்கை ஓரிடத்தே யிருந்து தனக்கு வேண்டினது பிதற்றிப் போகவும் அத்தை அறிவுடையார் 'நமக்கு நன்மை சொல்லுகிறது' என்று கொள்வார்களிறே" என்ற வ்யாக்யாந வாக்யம் காணத்தக்கது.

இற்றைக்குச் சற்றேறக்குறைய 1800 யாண்டுகளுக்கு முன்னர் இருந்த கடைச் சங்க காலத்தில் **காக்கைபாடினியார் நச்செள்ளையார்** என்றொரு தமிழ்ப் புலவர் இருந்தார். 'செள்ளையார்' என்னும் சொல் 'தாய்' என்னும் பொருளுடைய தென்றும், 'தள்ளை' என்பது 'சள்ளை' என்று மருவி, அது 'ஆர்' என்னும் பன்மை விகுதி பெற்றுக் கால க்ரமத்தில் 'செள்ளையார்' என வாயிற்றென்றும் கூறுவர். [தாயைத் **தள்வ** யென்பது, குட்ட நாட்டு சொல்; தந்தையை **அச்ச** னென்பது குட நாட்டுச் சொல்; இவை கொடுந் தமிழ்த் திசைச் சொற்கள் எனப்படும்.] இப்பெண் புலவர் 'ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்' என்னும் மலை நாட்டரசனைப் பாடி அவன்பால் ஒன்பது காப் பொன்னும் [கா-தோட்சுமை] நூறாயிரம் காணமும் பரிசுபெற்றார் என்பர். ஆதலின் இவர் 'ந' என்ற சிறப் பெழுத்துடன் 'நச் செள்ளையார்' என வழங்கப்பட்டார். [நகரம் தமிழ் மொழியில் சிறப்பெழுத்தாக வருதலை, **நக்கிரன் நப்பின்னை** என்பதிற் காணலாம்]. இவர் தமது கணவனுடைய பிரிவினால் வருந்தியிருந்த பொழுது, அதற்குப் பரிஹாரமாக விருந்துவரக் காக்கை கரைந்ததைப் பாராட்டி ஒருபாடல் பாடினமையால் இவர், 'காக்கை பாடினியார்' என்று பெயர் பெற்றார் என்பர். அச்செய்யுள் வருமாறு:—

"திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே." [குறுந்தொகை-210]

[இதன் பொருள் :—தலைவனது பிரிவாற்றாமையால் வருந்தும் எனக்கு அவ்வருத்தம் நீங்கும்படி விருந்துவரக் கரைந்த காக்கைக்குப் பலியாகத் திண்ணிய தேரையுடைய வள்ளலாகிய நள்ளியின் காட்டிலுள்ள பசுக்களின் நெய்யோடு * தொண்டி யென்னும் ஊரிலுள்ள வயல்களில் விளைந்த வெண்ணெல் அரிசியால் ஆக்கிய சுடு சோற்றை ஏழு பாத்திரங்களில் ஏந்தினாலும் அது சிறிதாகும். [போதாது.] காக்கை செய்த உதவி அவ்வளவு பெரியது என்பதாம்.

காக்கை கரைதல் புதியோர் வரவைக் குறிக்கும் நிமித்தமாகு மென்பதை,

"மறுவி றூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையோ
டஞ்சி லோதியை வரக் கரைந்தீமே"

என்னும் ஐங்குறு நூற்றுச் செய்யுளாலும் (391) அறியலாம்.

இதுகாறும் கூறியவாற்றான், காக்கை கரைதல், விருந்து வருதற்கும் பிரிந்த தலைவன் மீண்டு வருதற்கும் ஒரு நற்குறியாகத் தொன்று தொட்டே கொள்ளப்பட்டு வருதல் போதரும்.

---

* **தொண்டி** யென்பது, மேற் கடற்கரைக் கண்ணே யுள்ளதொரு சேர நாட்டுத் துறைமுகப் பட்டினம்.

*Supplement to this issue*

ஸ்ரீ:

# 1944 - அக்டோபர் மாஸத்தில் சந்தா வரவு.

| | | | | ரு. | அ. |
|---|---|---|---|---|---|
| 87 | ஸ்ரீ | T. P. ராஜகோபாலையங்கார், பொன்மலை | ... | 3 | 0 |
| 162 | ,, | P. B. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திருமலை | ... | 3 | 0 |
| 179 | ,, | K. R. ராமஸ்வாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி | ... | 3 | 0 |
| 203 | ,, | பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. ஸர் எஸ். வரதாசார்யர், புது டெல்ஹி | | 3 | 0 |
| 229 | ,, | P. S. தேசிகாசார்யர், மன்னார்குடி | ... | 3 | 0 |
| 239 | ,, | T. R. வேங்கடாசார்யர், புதுகோட்டை | ... | 3 | 0 |
| 264 | ,, | C. R. க்ருஷ்ணமாசார்யர், கடலூர், N. T. | ... | 3 | 0 |
| 276 | ,, | V. சக்ரவர்த்தியாசார்யர், ஸ்ரீரங்கம் | ... | 3 | 0 |
| 374 | ,, | V. ரங்கஸ்வாமி, ஈரோட் | ... | 3 | 0 |
| 410 | ,, | அப்பா. ஸ்ரீநிவாஸையங்கார், கல்யாணபுரம் | ... | 3 | 0 |

[P.T.O.]

| | | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| 493 | ஸ்ரீ | A. நரஸிம்ஹ ஐயங்கார், ஸ்ரீரங்கம் | ... | 3 | 0 |
| 494 | ,, | சேஷையங்கார், பொன்மலை | ... | 3 | 0 |
| 527 | ,, | Dr. P. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், தியாகராயநகர் | ... | 3 | 0 |
| 540 | ,, | S. N. ஸ்ரீராம தேசிக சிரோமணி, திருப்பதி | ... | 3 | 0 |
| 636 | ,, | G. ஸௌம்யநாராயணன், திருக்கோட்டியூர் | ... | 1 | 8 |
| 638 | ,, | செல்லம்மாள் [ரங்கநாயகி அம்மாள்] அன்னதூர் | ... | 3 | 0 |

## 1945-ம் ஆண்டுச் சந்தா வஸூல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 162 | ஸ்ரீ | P. B. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திருமலை | ... | 3 | 0 |
| 611 | ,, | R. ராமரத்நம், கோல்மூரி | ... | 3 | 0 |

[குறிப்பு :—(1) சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் நீலாம்பூர் ஸ்ரீ. உப. குப்புஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலைக்காக ரூ. 200–0–0 ஸ்ரீ ஸந்நிதிக்கு ஸமர்ப்பித்துக்கொண்ட ஸமாசாரத்தை நாம் நன்றியறிவுடன் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறோம். (2) சென்ற ஸஞ்சிகையில் சந்தா வரவு ஜாபிதா வெளியீட்டில் 294-நெம்பர் ஐ. ஸ்ரீநிவாஸாசார்யர் வரவு தவறுதலாக ரூ. 3–0–0 என்று வெளியிடப்பட்டிருக்கிறது. அது ரூ. 1–0–0 என்று இருக்கவேண்டும்].

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ வரஹ்ரூஹணே நம:

# ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் ப்ரபாவம்

---

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

(ஸம்புடம் 3 ; ஸஞ்சிகை 10 ; பக்கம் 258-ன் தொடர்ச்சி)

தலைச்சுழியைத் தவிர்க்க ஸர்வேஸ்வரனாலும் ஸாத்யமில்லை யல்லவா? ஹிரண்யன், ராவணன், சிசுபாலன், கம்ஸன் முதலிய அஸத்துக்கள், மஹான்கள் போதித்த நீதிகளை அநாதரித்து அடியோடு அழிந்ததைப் போலவே ஆயிற்று இம்மந்த மதியின் கதியும். இப்பையன் பாகவதாபசாரப்பட்டு, அவர் சாபத்தால் அதோகதியாக வேண்டியவன்; ஆனால் அவர் கருணையினால் கடைத்தேறினான்.

ஜலத்திற்குக் குளிர்ச்சி ஸ்வபாவம். சுடச்சுடக் காய்ச்சினாலும் அது மறுபடியும் தன் தன்மையையே அடையும். அத்தன்மையினால் ஸித்தித்தது தெளிவு என்னும் குணம். மேலும், கீழ்நோக்கிச் செல்வதே அதன் இயல்பு. அதேபோல் சீதளமும் தெளிவும் பரிசுத்தமும் வாய்ந்த பாகவதோத்தமர்களின் கருணை வெள்ளமும் தாழ்ந்தவர்களிடம் பாய்ந்து ஓடுவதில் ஆச்சரியம் தானென்ன!

புத்தியற்ற சிறுவன். "பார்க்கலாம் சாமி, பாப்பார ப்ரதாவத்தை" என்று ஆர்ப்பாடமும் அட்டஹாஸமும் கொண்டு, மறுபடியும் அம்மயிலைக் காளையை ஏவினான். மாடு மஹான் ஸமீபம் நாடாமல் அத்யாக்ரஹத்துடன் அப்பையனையே துரத்தத் தொடங்கியது. பாலகன் பயந்து, மேட்டிலும் பள்ளத்திலும் வயலிலுமாக விழுந்தடித்து ஓடினான். மாடும் விடாமல் பின் தொடர்ந்து துரத்தியது. பரம பாகவதனாகிய ப்ரஹ்லாதாழ்வான் மேல் உபாத்யாயர் ஏவின பூதம் அவரையே துரத்தி யடித்தது போலாயிற்று. முடிவில் பையன் களைத்துக் கீழே விழுந்தான். அந்தோ! பரிதாபம்!! துஷ்டக் காளை கூர்மையான தன் கொம்பினால் சிறுவன் வயிற்றைக் கிழித்துவிட்டு ஓடியது.

இமைப்பொழுதில் நேர்ந்த இவ்வாபத்தைக் கண்ணுற்ற ஸ்வாமியின் உள்ளம் கருணையினால் கரைந் துருகியது. அவனிருக்கு மிடம் விரைந்து சென்று செம்பில் இருந்த தீர்த்தத்தை முகத்தில் தெளித்துப் பருகவும் கொடுத்தார். "ஐயோ! நான் இம்மார்க்கமாய் வந்ததனா லன்றோ இப்பாலகனுக்கு இக்கதி நேர்ந்தது. விரராகவா! லக்ஷ்மீ ந்ருஸிம்ஹா! வரதா! க்ருபை செய். உன் அருளுக்கு ஸகல சேதநாசேதநங்களும் பாத்ரங்கள். ஸர்வ லோகத்திற்கும் நீ ஒருவனே தாய் தந்தை பந்து மித்ரனாகிறாய். ப்ரஹ்லாதன் உன் கட்டளையை மீறாமல் உன் பொன்னடி பணிந்தான். அவனை ரக்ஷித்தாய். அவன் தந்தை ஹிதத்தைக் கேளாமல் துஷ்டனாய் உன்னைப் பகைத்தான். நீ தந்தை யாகையினாலே அவனைத் தண்டித்துக் காத்தாய். அடியார்களைக் காப்பாற்றும் பொருட்டே அழகிய ஆஸநத்தில் எழுந்தருளி, விஷமப் பார்வைகளால் அண்டினவர்களை ஆதரவுடன் குளிரக் கடாக்ஷித்தும், அல்லாதவர்களைத் தஹிக்கும் த்ருஷ்டியோடு பார்த்தும் வேகவதி மணல் குன்றில் விளையாடுகிறாய். அழகியசிங்கப் பெருமானே! உன்னை வேண்டுகிறேன்."

"ஸர்வலோக சரண்யனாகிய நீ, அன்றீன்ற கன்றுக் கிரங்கும் தேனுவைப் போல் க்ருபை சுரந்து காப்பாற்ற முன்வருமளவில் மற்ற பிரமன், சிவன், இந்த்ரன், முதலிய தெய்வங்கள் எம்மாத்ரம்? காகாஸுரன், கஜேந்த்ரன், மார்க்கண்டேயன், பாணாஸுரன் முதலியவர்கள் பட்டபாட்டைக் கேட்டிலையோ? நீ உதாஸீநமாய் ரக்ஷிக்காமல் கைவிடில் அப்பொழுது அவர்களால் என்ன பயன்? ஆகவே 'உன் திருவடித்தாமரை யல்லது வேறு ரக்ஷக ரில்லை' என்னும் உண்மையை அறிந்த நான் உன்னிடம் மெய்யன்பும் த்ருட நம்பிக்கையும் கொண்டு, வேகவதி நதிக்கரையில் நித்ய வாஸம் செய்யும் உன் திருவடி யிணைகளை அடைக்கலமாகப் பற்றுகிறேன்."

"बन्धुमखिलस्य जन्तोः बन्धुरपर्यङ्कबन्धरमणीयम् ।
विषमविलोचनमीडे वेगवतीपुलिनकेलिनरसिंहम् ॥
त्वयि रक्षति रक्षकैः किमन्यैस्त्वयि चारक्षति रक्षकैः किमन्यैः
इति निश्चितधीः श्रयामि नित्यं नृहरे वेगवतीतटाश्रयं त्वाम् ॥"

என்று பகு விதமாய் லக்ஷ்மீந்ருஸிம்ஹனைத் துதித்தார். சிறுவன் சிறிது நினைவு அடைந்து கண்ணைத் திறந்தான். எதிரில் நிற்கும் ஸ்வாமியைப் பார்த்துக் கண்களில் நீர் ததும்பக் கை கூப்பினான். மஹானும் அவனை க்ருபையுடன் நோக்கி, "அப்பா பயப்படாதே. இனி நல்லொழுக்கத்துடன் வாழ்வாய்" என்று ஆசீர்வதித்தார். மேலும், ரணம் குணமாகும் பச்சிலையைப் பறித்துவந்து, மற்றொரு பையனிடம் கொடுத்து அரைத்துப் போடுமாறு செய்தார். அவன் மெதுவாய் எழுந்து க்ராமம் சென்றபின் ஸ்வாமி தம்மூர் சென்றார்.

மஹாத்மாக்களின் மஹிமையை அறிபவர்கள் அபூர்வம். "தாமரைக் குளத்தில் கூட்டங் கூட்டமாய்த் தவளைகள் வஸிக்கின்றன. அவைகளுக்குக் கமலங்களி லிருக்கும்

தேனைப் பருகிக் களிக்கும் பாக்யம் இல்லை. ஆனால் வெகு தூரத்தில் இருக்கும் வண்டுகள் அருகில் வந்து அருந்தி ஆநந்திக்கின்றன. இம்மஹான் ப்ரபாவத்தை அறிந்த தங்யர்கள், திவ்யாஸநத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராதிக்கும் அழகியசிங்கராக மூர்த்தாபிஷேகம் செய்தார்கள்.

ஸ்ரீ:

# செய்திகள்

(1)

## ஸ்ரீ கல்யாணபிவர்த்திநி ஸபா, மதுராந்தகம்.

ஷை ஸபையானது மார்ச்மீ 7௳ மாலை 5-மணிக்கு வ்யாகரணத்யாபகர் ஸ்ரீ. உப. ராகவாசார்ய ஸ்வாமி தலைமையில் ந்யாய சிரோமணி T. C. நரஸிம்ஹ ராகவாசார்யரால் "நஞ் ஸமாஸ தத்புருஷ" என்னும் விஷயமும், ஆகஸ்ட்மீ 2௳ மாலை 5-மணிக்கு முக்கூர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி தலைமையின்கீழ் ந்யாய சிரோமணி S. வரதாசார்யரால் "ஸ்வத்வம்" என்னும் விஷயமும், ஆகஸ்ட்மீ 19௳ ந்யாயாத்யாபகர் ஸ்ரீ. உப. நாராயணசார்ய ஸ்வாமி தலைமையின்கீழ், ந்யாய சிரோமணி ரகுநந்தனனால் "வரோவகாரஃ" என்னும் விஷயமும் உபந்யாஸம் செய்யப்பட்டன.

K. ராமாநுஜாசார்யர், கார்யதரிசி.

குறிப்பு:— ஷை ஸபைக்கு ஆகஸ்ட்மீ 1௳யிலிருந்து வ்யாகரண சிரோமணி கரளப்பாக்கம் ராமாநுஜாசார்யர் கார்யதர்ஸியாகவும், A. V. நரஸிம்ஹாசார்யர் உப கார்யதர்ஸியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

(2)

## திருமலை உத்ஸவங்கள்

## ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் வர்ஷ திருநக்ஷத்ரம்

இவ்வர்ஷம் திருமலையில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹா தேசிகன் வர்ஷ திருநக்ஷத்ரம், புரட்டாசி மாஸத்தில் அத்யாபக வேத பாராயண கோஷ்டிகளுடன் ஐந்து நாட்கள் வெகு விமர்ஸையாக நடைபெற்றது. சாத்துமறையன்று ஸ்ரீ ஸ்வாமி மண்டபத்தில் எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை மங்களாசாஸநம் செய்தருளினார். ஸ்வாமிகள் விசேஷமாய் ஸேவைஸாதித்தார்கள். விசேஷ தளிகைகளுடன், ராத்ரி சாத்துமறை ஸம்ப்ரமமாக நடந்தேறியது.

இவ்வர்ஷம் திருமலை ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ திருவேங்கடமுடையானுடைய ப்ரம்ஹோத்ஸவத்துக்கு வந்திருந்த ஸ்ரீ வைஷ்ணவ தேசாந்த்ரிகளுக்குப் பத்து நாட்கள் விசேஷ ததீயாராதநம் நடைபெற்றது. தினம் ஒன்றுக்கு ஸுமார் 600, 700 திருநாமங்களுக்குக் குறையாமல் ஸேவை ஸாதித்தார்கள். ஷை மடம் முத்ரை கர்த்தா இஞ்சிமேடு ஸ்ரீ. உப. சேட்லூர் வேதாந்தாசார்ய ஸ்வாமி இதில் ஸ்ரத்தை எடுத்துக்கொண்டு நடத்தியதும், ஸ்ரீ. உப. D. ராஜகோபாலாசார்ய ஸ்வாமியின் உதவியும் மெத்தவும் பாராட்டற்பாலன.

—உருப்பட்டூர். சக்ரவர்த்தி ராகவாசார்யர்.

(3)

## பம்பாய் - மாதுங்காவில் ஆசார்யோத்ஸவ வைபவம்

இவ்விருள்தருமா ஞாலத்தில் ஸமஸ்த சேதநர்களும் பரமாந்தகாரத்தில் மூழ்கியிருக்குங்கால், நம் எம்பெருமானார் திருவவதாரம் செய்தருளி குத்ருஷ்டி நிரஸநம் செய்து விஸிஷ்டாத்வைதத்துக்குப் புத்துயிரளித்தார். எம்பெருமானாரைவிட மேற்பட்ட உபகாரம் செய்தவர் நம் தூப்புல் வள்ளல் என்பது யாவரும் அறிந்த விஷயம். பல்படியாலும் பரமோபகாரம் செய்த இவ்வாசார்ய வள்ளல்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு என்ன? அவர்கள் காட்டிய வழியில் நடப்பதும், அவர்களது திருவவதார திநத்தைக் கொண்டாடுவதுமே நாம் செய்யும் கைம்மாறாகும்.

பம்பாயில் மாதுங்காவில் ஸ்ரீ. உப. S. S. அய்யங்கார் ஸ்வாமி தமது க்ருஹத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் உத்ஸவத்தையும், அதன் தொடர்ச்சியாக ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி உத்ஸவத்தையும் அத்யாஸ்சர்யகரமாக நடத்தினர். புரட்டாசிக் கேட்டை தினத்தன்றும் ஸ்ரவணத்தன்றும் ஸம்பாவநை முதலியன நடந்தன. இவ்வுத்ஸவ ப்ரயுக்தமாகப் பத்துநாள் முன்னடியே பகவத் விஷய காலக்ஷேபங்களும் தேசிக ப்ரபந்த பாராயணமும் வெகு ஸ்ராவ்யமாய் நடத்தப்பட்டன. இவ்வுத்ஸவங்கள் இவ்வளவு வெற்றிகரமாக நடந்ததற்கு ஸ்ரீ. உப. S. S. ராஜகோபாலையங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. N. சடகோபாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. பாட்டராசார்ய ஸ்வாமி முதலியவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவுமே காரணமாகும்.

—புதுக்கோட்டை V. ஸ்ரீநிவாஸையங்கார்.

(4)

## திருவெவ்வுளூரில் ஸ்ரீ ஹரிகதா காலக்ஷேபம்.

திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி வேத ஸாஹித்ய சாஸ்த்ர பாடசாலையின் பேருதவிக்காக உள்ளூர் வக்கீல்கள் ஸ்ரீமான்கள் C. V. நாயுடுகாரு, M. வேங்கடரமணய்யங்கார், பார்த்தஸாரதி ஐயங்கார், இவர்களுடைய ஆதரவின்பேரில் ஸெப்டம்பர்மீ 12உ செவ்வாய்க்கிழமை திருவெவ்வுளூர் வட்வண்டை ராஜவீதியில் தஞ்சாவூர் ராமா நாயகர் சத்திரத்தில் மாலை 5-45 மணிக்கு ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் சடகோபாசார்ய ஸ்வாமி இலவசமாக “ஸ்ரீ பீஷ்ம த்விதீய ப்ரதிஜ்ஞை” என்னும் காலக்ஷேபத்தை வெகு விமர்சையாய் நடத்தினார். ஆரம்பத்தில் ஷை ஸபைக்கு அக்ராஸநம் வஹிக்க எதிர்பார்த்திருந்த சென்னை அட்வோகேட் ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி, தம்முடைய லௌகிக விசேஷ அலுவல்களினால் வரக்கூடாமையைப் பற்றித் தெரிவித்திருந்த ஸ்ரீமுகத்தை, ஸ்ரீமான் வக்கீல் பார்த்தஸாரதி ஐயங்கார் ஸபையோர்க்கு வாசித்துக் காட்டினார். ஷை ஸ்வாமியின் ப்ரேரேபணையின்பேரில், ரிடையர்டு தாசில்தாரும் வனபர்த்தி ஸமஸ்தாந மானேஜருமான ஸ்ரீமான் T. R. சடகோப ஐயங்கார் ஸ்வாமி ஷை அக்ராஸநத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஷை காலக்ஷேபத்துக்கு உள்ளூர் ஸ்த்ரீகளும் கனவான்களும் ஏராளமாக வந்திருந்தனர். காலக்ஷேப முடிவில் அக்ராஸநாதிபதி, இப் பாடசாலையை எல்லாரும் ஒத்துழைத்து இதனை ஸ்திரமாய் நடத்திவைக்க வேண்டுமென்று ஸதஸ்யர்களைக் கேட்டுக்கொண்டார். பிறகு வேதகோஷத்துடன் ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் சடகோபாசார்ய ஸ்வாமிக்குத் தாம்பூலாதிகளுடன் ஸம்பாவனை செய்யப்பட்டது. ஷை பாடசாலைக் கார்யதரிசி ஸ்ரீமான் T. C. வேதாந்தாசார்ய ஸ்வாமி, காலக்ஷேபத்துக்கு டிக்கெட் விற்பனையினால் வஸூலித்த தொகை மார்க்கச் செலவுபோக சுமார் ரூ. 475–0–0 நின்றிருக்குமென்று தெரிவித்தார். பாடசாலை வைஸ் ப்ரஸிடெண்ட் சித்தூர் வக்கீல் ஸ்ரீ. உ.ப. L. C. ஸுந்தர வரதாசார்ய ஸ்வாமி, இன்னும் பத்து வித்யார்த்திகளுக்கு ஹாஸ்டல் மூலமாய்ப் பாசகர் வைத்து இலவசமாக ஆஹாரம் கொடுப்பதாக அபிப்ராயப்பட் டிருக்கிறு ரென்பதைக் கார்யதரிசி தெரிவித்தார்.

(5)

## ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மாணவர் ஸபை, சிங்கநல்லூர்.

16–10–44 திங்கட்கிழமை தீபாவளி தினத்தன்று ஷை ஸபைக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ. உ.ப. எஸ். வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி கூட்டத்திற்குத் தலைமை வஹித்தார். ஸ்ரீமான் கே. த்ரிவிக்ரம நாராயண அய்யங்கார், ஸபை அபிவ்ருத்தி ஸம்பந்தமாக உபந்யாஸம் செய்தார். ஸபையின் சார்பாகக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. அவை வருமாறு:—1. வருகிற தை மாஸம் 42-வது பட்டம் அழகியசிங்கரின் திரு நக்ஷத்ரத்தை விசேஷமாகக் கொண்டாடுதல். 2. மாணவர்கள் வைதிக ஸம்பந்தமான மந்த்ரங்களை அத்யயநம் செய்தல். 3. ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவர் க்ருஹத்திலும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவை அவஶ்யம் படிக்க ப்ரசாரம் செய்தல். 4. ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப ஸபைக் கார்யதர்சி ஷை ஸபைக்குப் போதகாசிரியராக நியமிக்கப்படுதல்.

S. K. ராஜகோபாலன், தலைவர். S. N. ரங்கநாதன், கார்யதர்சி.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

# ஸம்பாதகரின் குறிப்புக்கள்

**ஸ்ரீ அழகிய சிங்கரின் மைஸூர் யாத்ரை.**

சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் ஸ்ரீ அழகிய சிங்கர் மைஸூர் ராஜ்யத்தைச் சேர்ந்த மேல்கோட்டையில் எழுந்தருளி யிருப்பதாக விண்ணப்பித்துக் கொண்டிருந்தோம். ஸ்ரீரங்கப்பட்டணம் முதலிய ப்ரதேஶங்களில் ஸஞ்சாரத்தைச் செய்து ஆங்காங்கு அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுக்கு மங்களங்களை ஆஶாஸித்துக்கொண்டு, அந்தந்த ஸ்தலங்களிலுள்ள ஆஸ்திகாக்ரேஸரர்களால் யதாஶக்தி ஆராதிக்கப்பட்டவராய், செல்வப் பிள்ளையை ஸேவிக்கவேண்டுமென்னும் த்வரையுடன் மேல்கோட்டைக்கு எழுந்தருளி, அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடத்திலுள்ள ஆதராதிஶயத்தாலும் அங்குத் தென்படும் ஸ்தல ஜல ரமணீயதையாலும் ஆகர்ஷிக்கப்பட்டு, ஸ்ரீ அழகிய சிங்கர் தமது பரிவாரங்களுடன் சற்றேறக்குறைய பத்து தினங்கள் அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்தார். அப்பொழுது அவ்விடத்தில் ப்ரதிதினம்

Regd. No. M. 4437



காலை மாலை இரண்டு காலங்களிலும் வித்வத் ஸதஸ் நடைபெற்றது. ஸதஸ்ஸில் அந்வயித்த வித்வான்களுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு அதிகமாகவே ஸம்பாவனை செய்யப்பட்டது. 18-10-44ல் தொண்டனூருக்கு எழுந்தருளி, அவ்விடத்தில் ஏரிகரையில் எழுந்தருளியிருக்கும் கண்ணனுக்கும் சேர்த்து அபிகமநாராதநத்தைக் கண்டருளப்பண்ணி, 25-10-44ல் பெங்களூரை அடையும்படி ததபிமுகமாக எழுந்தருளியாயிற்று. அந்த 25-ம் தேதியன்று பெங்களூரில் நடைபெற்ற நகர ப்ரவேசத்தின் பெருமை அத்யாச்சர்யம். அநேக ஆஸ்திக ப்ரபுக்கள் பெருத்த ஸங்கமாக ஒன்று சேர்ந்து ஸ்ரீ அழகிய சிங்கரை எதிர்கொண்டு அழைத்து வரவேற்றார்களாம். பெங்களூரில் துளஸீ தோட்டத்தில் ஒரு மாஸ காலம் எழுந்தருளியிருந்து, பிறகு வேலூர் சித்தூர் மார்க்கமாக ஸ்ரீ அஹோபிலம் எழுந்தருளவேண்டுமென்பது ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளம். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அந்தத் திருவுள்ளத்தைத் தலைக்கட்டி வைக்கவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

மைஸூரில் ஸஞ்சாரம் செய்தருளுகையில், அநேக ஆஸ்திகர்கள் அநேக இடங்களில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவித்து அவனை யதாசக்தி ஆராதித்து க்ருதார்த்தரானார்களென்று நாம் கேள்விப்படுகிறோம். திவ்பாலிச் சத்ரம் என்னுமிடத்தில், மைஸூர் மஹாராஜனுடைய பந்துவாயிருக்கும் ஸ்ரீமான் பீ. என். நஞ்சராஜ உர்ஸ் என்னும் ஒரு ப்ரபு ஸ்ரீ அழகியசிங்கரைத் தமது ஸ்தானத்திற்கு எழுந்தருளப்பண்ணி, பாதபூஜை முதலிய வைகளை மிக்க ச்ரத்தையுடன் செய்து, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு உத்தமமான ஒரு அச்வத்தையும் ஸமர்ப்பித்தாராம். பச்சிமவாஹிநி என்னும் மற்றோரிடத்தில் தண்டாளம் ஸ்ரீமான் ப. ஜீ. ஆராவமுதாசார்யர் என்னும் ஒரு மஹான் பரத்வாஜாதித்யம் போன்ற ஆதித்யத்தை ஸ்ரீ அழகியசிங்கருக்குச் செய்வித்தார் என்று கேள்விப்படுகிறோம். இந்த ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கருக்குப் பூர்வாச்ரமத்தில் பரிசிதராம்; நானூறு ரூபாயைப் பாதகாணிக்கையாகவும் ஸமர்ப்பித்துக்கொண்டாராம். 19-10-44-ல் 'மண்டயா' என்னும் ஒரு ஸ்தலத்தில் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களால் ஆராதிக்கப்பட்டு ஒருநாள் ஸ்ரீ ஜநார்த்தந ஸ்வாமி ஸந்நிதியில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது 'மீயர் ஹைதர் ஹுஸேன்' என்னும் டெபுடி கமிஷனர், பூர்ணையா சத்ரத்தில் ஸ்ரீ ஸ்வாமியைத் தர்சித்தாராம்.

* * * *

**ஸ்ரீ தேசிக ப்ரபந்த உத்ஸவம்**

வருகிற டிஸம்பர்மீ 24, 25, 26 தேதிகளில், தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் இருக்கும் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில், "**ஸ்ரீ தேசிக ப்ரபந்த உத்ஸவம்**" என்னும் ஒரு மஹோத்ஸவத்தைத் தஞ்சாவூர் ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் அங்கத்தினர்கள் கொண்டாடப்போவதாகக் கேள்வியுற்று நாம் மிக்க ஆநந்தத்தை அடைகின்றோம். ஒப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ. உப. வே. நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி என்னும் வித்வான், சில வர்ஷகாலமாக ஸ்ரீ தேசிக ப்ரபந்தத்திற்கு உத்தமமான ஓர் உரை எழுதி வருகிறார். அது இப்பொழுது முடிவுபெறும் ஸமயம். ஏற்கெனவே அந்த ஸ்வாமி தேசிக ப்ரபந்தம் (மூலம்) பல புலவர்களுடன் தெள்ளிதின் ஆராய்ந்து ஸ்ரீ உ. வே. மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் V. V. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியின் முகவுரையுடன் அச்சிட்டு ப்ரசுரப்படுத்தியிருக்கிறார். இப்பொழுது இதன் உரைப் புத்தகத்திற்கு மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ உப. கே. எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி முகவுரை ஒன்றை எழுதுகிறார். அந்த வ்யாக்யாநத்துடனும் முகவுரையுடனும் அந்த ப்ரபந்தம் அக்காலத்தில் அரங்கேற்றப்படுமென்றும், அப்பொழுது பெரியதொரு வித்வத் ஸதஸ் நடைபெறுமென்றும் நமக்குச் செய்தி கிடைத்திருக்கின்றது. ஜகத்தின் ஹிதத்தை உத்தேசித்து ஸ்ரீ தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள திவ்ய ஸூக்திகளின் மஹிமையைப் புகழ்வதைக் காட்டிலும் ஸ்ரீ தேசிகனுக்கு நம்மாற் செய்யக்கூடிய கைம்மாறு வேறொன்றுண்டோ?

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்

### தாரண ஸ்ரீ கார்த்திகை மீ

| | | | |
|---|---|---|---|
| 1உ | வியாழக்கிழமை | ... | வ்ருச்சிக சுக்ல ப்ரதமை திதி. |
| 11உ | ஞாயிற்றுக்கிழமை | ... | கைசிக ஏகாதசி; ஏகாதசி - த்வாதசி திதி த்வயம். |
| 12உ | திங்கட்கிழமை | ... | த்ரயோதசி திதி. [கைசிக த்வாதசி] |
| 14உ | புதன்கிழமை | ... | ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருநக்ஷத்ரம். |
| 15உ | வியாழக்கிழமை | ... | ஸ்ரீ விஷ்ண்வாலய தீபம்: ஸ்ரீ பாண் பெருமாள் திருநக்ஷத்ரம் |
| 21உ | புதன்கிழமை | ... | ஸப்தமி திதி. |
| 24உ | சனிக்கிழமை | ... | தசமி திதி. |
| 25உ | ஞாயிற்றுக்கிழமை | ... | அதிதி. |
| 26உ | திங்கட்கிழமை | ... | ஏகாதசி திதி: ஸர்வ ஏகாதசி. |
| 29உ | வியாழக்கிழமை | ... | வ்ருச்சிக க்ருஷ்ண சதுர்த்தசி திதி. |

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G.T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.